Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 144

வியாழக்கிழமை
18 ஏப்ரல் 2024

சித்திரை 05 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"உந்தப் பொதுவேட்பாளர் விசயத்தை வைச்சே இந்தத் தேர்தல்முழுக்க எங்கடையாக்கள் கொழுவுப்படப்போயினம் பாருங்கோ"

சர்வதேச கடன் மறுசீரமைப்பில்

# அரசின் அவசரம் ஆபத்தில் முடியும்



ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை

வெளிப்படைத்தன்மைக்கு வலியுறுத்து

கொழும்பு, ஏப்ரல் 18

பொருளாதார வளர்ச்சி வேகத்துக்கமைய கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ள அரசாங்கம் இணங்கியுள்ளது என்று தெரிகின்றது. கடன் மறுசீரமைப்பில் பொருளாதார வளர்ச்சி வேகம் ஓரளவு தாக்கம் செலுத்தலாம். ஆனால், நூறு வீதம் தாக்கம் செலுத்தினால் எதிர்மறையான விளைவுகளே அதிகரிக்கும். 12



## ராஜபக்ச கூட்டு உள்ளவரை தமிழரின் ஆதரவு கிட்டாது!

ரணிலுக்கு டிலான் அறிவுரை

கொழும்பு, ஏப்.18

ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்சக்களின் பக்கம் நிற்கும் வரையில் அவரால் வடக்கு மற்றும் மலையகத் தமிழர்களின் ஆதரவைப் பெறமுடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டில் உள்ள வாக்காளர்களில் 40 வீதமானோர் யாருக்கு வாக்களிப்பது என்பதை இன்னும் தீர்மானிக்கவில்லை. 60 சதவீத வாக்குகளை வைத்துத்தான் கருத்துக் கணிப்புகள் வருகின்றன. அது உறுதியான முடிவாக அமையாது.

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் வாழும் தமிழ் மக்கள், ராஜபக்சக்களுடன் ரணில் விக்கிரம 11

## தமிழ்ப் பொதுவேட்பாளரும் ஒருவகைப் புறக்கணிப்பே!

விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

விரிவு :- பக். 11

தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயம்;

## சுமந்திரனின் கருத்து அற்பத்தனமானது!

கூறுகின்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

யாழ்ப்பாணம், ஏப்.18

தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவது சிங்களத் தரப்பைக் கோபப்படுத்தி, இனவாதத்தைத் தூண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளு 11

## க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை இந்தமுறை கடும் கண்காணிப்பு!

கொழும்பு, ஏப்.18

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. கைபேசிகள், இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் பரீட்சை நிலையத்துக்குக் கொண்டுவரத் தடை விதிக்கப்பட்ட பொருள்களை எடுத்து வரக்கூடாது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர கண்டிப்புடன் தெரிவித்துள்ளார்.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்தப் பரீட்சையில் 4 இலட்சத்து 52 ஆயிரத்து 979 பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர். பரீட்சை தொடர்பாக நேற்றுக் கருத்துத் தெரிவித்தபோதே பரீட்சைகள் ஆணையாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சாதாரண தரப்பரீட்சையை 11

## சா/ த. பரீட்சை அ. அட்டைகள் அடுத்தவாரம்

கொழும்பு, ஏப்.18

2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் அடுத்த வாரம் விநியோகிக்கப்படும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. 09

மேய்ப்பர்களைத் தாக்கிவிட்டு

## பட்டியில் இருந்த ஆடுகளை கொள்ளையிட்ட கும்பல்!

புதுக்குடியிருப்பில் சம்பவம்

முல்லைத்தீவு, ஏப்.18

புதுக்குடியிருப்பு, மல்லிகைத்தீவில் மேய்ப்பர்கள் மீது தாக்குதலை நடத்தி, அவர்களைக் காயப்படுத்திவிட்டு, ஆட்டுப் பட்டியில் இருந்து 35 ஆடுகள் கொள்ளை 09

## அன்னை பூபதிக்கு நாளை நினைவேந்தல்

மட்டக்களப்பிலும், நல்லூரிலும் அனுஷ்டிக்க ஏற்பாடு

கிளிநொச்சியில் அடையாள உணவு தவிர்ப்பு

யாழ்ப்பாணம், ஏப்.18

அன்னை பூபதியின் 36 ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு நாளை மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் நினைவேந்தல்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தமிழ் மக்களுக்காக அகிம்சை வழியில் போராடித் தன்னுயிரை ஈந்த அன்னை பூபதியின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளன. 10

யாழ். போதனாவுக்கு அனுப்பப்பட்ட

## நயினாதீவு கர்ப்பிணி கடல் நடுவே பிரசவம்!

யாழ்ப்பாணம், ஏப்.18

நயினாதீவிலிருந்து யாழ்.போதனா மருத்துமனை நோக்கிப் பயணித்த கர்ப்பிணிப் பெண் ஒருவர் படகில் – நடுக்கடலில் குழந்தையைப் பிரசவித்துள்ளார். 09




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்தமிழின ஒடுக்குமுறை 'நம்பிக்கையின் ஒளிக்கீற்று' ஆவணப்படம் வெளியீடு

ரொரண்டோ ஏப். 18

ஈழத்தமிழர்கள் மீதான ஒடுக்குமுறை மற்றும் இனவழிப்புப் பற்றிச் சொல்லும் 'நம்பிக்கையின் ஒளிக்கீற்று' (RAY OF HOPE) எனும் முழுநீள ஆவணப்பட வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி கனடாவின் SCARBOROUGH CONVENTION CENTRE, 20 TORHAM PL, SCARBOROUGH என்ற இடத்தில் நடைபெறவுள்ளது.




இலங்கை மதிப்பில் சுமார் 10 கோடி ரூபா செலவில் செலவில் தயாரிக்கப்பட்டிருக்கும் இந்த ஆவணப்படத்தை உருவாக்கியிருக்கிறார்கள் கனடா நாட்டைச் சேர்ந்த Ryan Singh மற்றும் இணைதயாரிப்பாளரான Nikila cole.

கனடாநாட்டின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசன் படத்தை தயாரித்துள்ளார்.

ஈழத்தமிழினத்தின் அடையாளம், வரலாறு மற்றும் திட்டமிட்டு கட்டமைக்கப்பட்டு தொடரும் தமிழின அழிப்பு பற்றிய உண்மைகளை வாழும் சாட்சியங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையில் பதிவான சாட்சியங்கள் ஆகியவற்றை மையமாக வைத்து ஆவணப்படம் திரைப்படமாக்கப்பட்டுள்ளது.

பல்வேறு நாடுகளையும் பின்புலங்களையும் கொண்ட படைப்பாளிகள், தொழில்நுட்பக் கலைஞர்களின் ஒரு கூட்டுப் படைப்பாக புலம்பெயர்ந்த இரண்டாம் தலைமுறையினரின் தேடுதல் மற்றும் கூட்டுமுயற்சியில் உருவாக்கப்பட்ட இந்த ஆவணப் படத்தை பன்மொழி பெயர்ப்போடு தருவதற்கு திரைக்குழு முன்வந்துள்ளது. (ச)

### ஆசிரியர்களின் சுற்றுலா

## கல்விப் பணிப்பாளரிடம் அனுமதிக்கும் அதிகாரம்

ஆசிரியர்கள் மற்றும் கல்வித்துறை உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுப் பயணங்களுக்கான விடுமுறைகளை அனுமதிக்கும் அதிகாரம் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி 6 மாதங்கள் மற்றும் அதற்குக் குறைவான வெளிநாட்டுப் பயணங்களுக்கான விடுமுறைகளை மாகாணக் கல்விப் பணிப்பாளர்களே அனுமதிக்க முடியும். கல்வி அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வந்த இந்த நடைமுறையால், நீண்டகாலம் எடுத்துக்கொள்ளப்படுவதை கருத்திற்கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

### எதிர்வரும் ஒரு வருடத்துக்குள்

# 32 ஆயிரம் பேருக்கு வடக்கில் வீடுகள்!



### வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஏப். 18**

**வடக்கு மாகாணத்தில் 32 ஆயிரம் பேர் வீட்டுத் திட்டங்களுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். எதிர்வரும் ஒரு வருடத்துக்குள் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.**

வவுனியா நெடுங்கேணி மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற புத்தாண்டுக் கொண்டாட்டத்தின்போதே வடமாகாண ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது:-

'வடக்கு மாகாணத்தில் இவ்வருடம் திட்டமிட்ட பயிர்ச்செய்கையை மேற்கொள்ளமுடியும். இதற்கு போதுமான அளவு நீர் காணப்படுகின்றது. பெரிய மற்றும் சிறிய குளங்களின் நீர்மட்டம் போதுமானதாகக் காணப்படுகின்றமையால் இடைப்போகம் மற்றும் சிறுபோகம் ஆகியவற்றில் சிறந்த விளைச்சலை எதிர்பார்க்கமுடியும். ஆகவே இதனூடாக வறுமையிலிருந்து மீள்வதற்கான சந்தர்ப்பமுண்டு.

இந்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தில் குளங்களைப் புனரமைப்பதற்கான நிதி ஒதுக்கீடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதேபோல வடக்கு மாகாணத்தில் உள்ள 17 குளங்களை புனரமைப்புச் செய்வதற்கான நிதியை மத்திய அரசாங்கத்திடமும் ஏனைய நிதி நிறுவனங்களிடமும் நாங்கள் கோரியுள்ளோம்.

மக்களிடையே கலை, கலாசாரத்தை வளர்ப்பதற்கு அவர்கள் வாழும் கிராமங்களிலேயே திறந்த வெளி மேடைகளை அமைத்து அங்கு வாழக்கூடிய இளைஞர் யுவதிகளுக்கு சந்தர்ப்பங்களை பெற்றுக் கொடுக்கவேண்டும். கிராமங்களில் திறந்தவெளி மேடைகளை அமைத்து நிகழ்ச்சிகளை அரங்கேற்றுவதன் ஊடாக எமது தனித்துவமான கலை, கலாசாரத்தைப் பேணிப் பாதுகாக்க முடியும்'- என்றார். (ம-27-26)

## கொழும்பு - டாக்கா நேரடி விமானசேவை

கொழும்பு ஏப். 18

கொழும்பு - பங்களாதேஷ் இடையே நேரடி விமான சேவை நேற்று புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இதுவரை கொழும்பிலிருந்து டுபாய், சென்னை மற்றும் மாலைதீவு ஆகிய மூன்று இடங்களுக்கு மட்டுமே நேரடி விமான சேவை இடம்பெற்றது. இந்நிலையில் புதிய வழித்தடங்களின் விரிவாக்கத்தின் கீழ் பங்களாதேஷின் டாக்கா - கொழும்பு இடையே நேரடி விமான சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ச)

## கணவன் தாக்கி மனைவி காயம்

யாழ்ப்பாணம், ஏப்.18

கணவனால் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட பெண் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் கணவன் தலைமறைவாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலியில் நேற்று மாலை நடந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (அ-எ-27)

## அதிரடிப்படையினருக்கு துப்பாக்கிச்சூட்டு பயிற்சி

கொழும்பு, ஏப். 18

நாட்டில் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விசேட அதிரடிப்படையினருக்குப் பயிற்சியளிக்கப்படவுள்ளது என்று பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

அதன்படி தப்பிச் செல்லும் பாதாள உலகக் குழு உறுப்பினர்களை மோட்டார் சைக்கிள்களில் துரத்திச் சென்று துப்பாக்கிச்சூடு நடத்த பயிற்சி வழங்கப்பட உள்ளது.

விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த 100 பேர் இந்த துப்பாக்கிச்சூட்டு பயிற்சிக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

எதிர்வரும் மூன்று மாத காலப் பகுதிக்குள் நாட்டிலிருந்து போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக் குழு செயற்பாடுகள் இல்லாதொழிக்கப்படும் என்றும் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (ச)

## ஐ.தே.கட்சியின் பலம் மேதினத்தில் தெரியும்

கொழும்பு, ஏப். 18

ஐக்கிய தேசியக் கட்சியின் பலத்தை நிரூபிக்கும் வகையில் இம்முறை மேதினக் கூட்டத்தைக் கொழும்பு பஞ்சிகாவத்தையில் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம் என்று கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.


ஐக்கிய தேசியக் கட்சி கடந்த பொதுத் தேர்தலில் பின்தள்ளப்பட்டிருந்தது. எனினும் வீழ்ச்சியடைந்த - அநாதரவாக நின்ற நாட்டை எமது கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முன்வந்து ஏற்றார். ஐக்கிய தேசியக் கட்சி மீதும் மக்களுக்கு தற்போது நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

நாட்டைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி ரணிலால் முறையான வேலைத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய ஐக்கிய தேசியக் கட்சியின் பலம் ஆதரவாளர்களின் எழுச்சியுடன் எதிர்வரும் மேதினத்தில் நிரூபிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

## மலையகத்தின் பிரச்சினையைத் தீர்ப்பதாக ரணில் வாக்குறுதி

கொழும்பு, ஏப். 18

மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதி வழங்கியுள்ளார்.



நுவரெலியாவுக்கு நேற்றுமுன்தினம் பயணம் மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் அங்கு தோட்டத்தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களைச் சந்தித்து கலந்துரையாடல் நடத்தினார். இதன்போதே மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதாக அவர் தெரிவித்துள்ளார். (ம-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை அரசாங்கத்தின் கடன் மறுசீரமைப்புக்கான கலந்துரையாடல் தோல்வி

**கொழும்பு, ஏப். 18**

**12 பில்லியன் டொலர் பெறுமதியான கடன் மறுசீரமைப்புத் தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடல்கள் தோல்வியில் முடிவடைந்துள்ளன.**

இலங்கை அரசாங்கத்தின் பிணைமுறிப்பத்திரம் வைத்திருக்கும் தனியாருடன் இடம்பெற்ற கடன் மறுசீரமைப்பு கலந்துரையாடலே தோல்வியில் முடிவடைந்துள்ளதாக திறைசேரியின் பதில் செயலர் ஆர்.எம்.பி.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் முன்வைத்த 28 சதவீத பெறுமதி விலக்கு கோரிக்கையை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை யெனவும் அவர் தெரிவித்துள்ளார். எனினும் அடுத்தடுத்த மாதங்களில் தொடர்ச்சியான கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## நோயாளிகளின் உணவிலும் சுகாதார அமைச்சு குளறுபடி

கொழும்பு, ஏப். 18

கொழும்பு தேசிய மருத்துவமனையில் நோயாளிகள் மற்றும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் கணிசமான அளவு உலர் உணவுப் பொருள்கள் தரமற்றவையாக உள்ளன என்று மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ருக்ஷான் பெல்லான தெரிவித்துள்ளார்.

நோயாளிகளின் உணவுக்காக வழங்கப்படும் மரக்கறிகள் சில அழுகிக் காணப்படுகின்றன. அத்துடன் நோயாளிகள் மற்றும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் தேநீரைத் தயாரிப்பதற்கு காலாவதியான பால்மா மற்றும் சீனி பயன்படுத்தப்படுகிறது.

சில சமயங்களில் சம்பந்தப்பட்ட ஒப்பந்த நிறுவனம் தொழிலாளர்களின் உணவுக்கு தகுதியற்ற மீன்களைக் கொண்டு உணவு தயாரிக்கின்றது என்றும் தெரியவந்துள்ளது. இது தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு பல தடவை தெரியப்படுத்திய போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (ச-இ)

## 4.5 பில்.டொலர் முதலீடு இலக்கை அடைவோம்!

### இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவிப்பு




இந்த ஆண்டு 4 முதல் 4.5 பில்லியன் டொலர் வரையிலான முதலீட்டை நாட்டுக்குக் கொண்டு வருவதற்கான அனைத்துத் திட்டங்களும் தயார் செய்யப்பட்டுள்ளன என்றுமுதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு 1.5 பில்லியன் டொலர் முதலீட்டுக்கான இலக்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், நாடு 1.8 பில்லியன் டொலர் முதலீடுகளைப் பெறமுடிந்தது. சர்வதேச நாணயநிதியத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின் முதலீடுகள் கணிசமான அளவில் நாட்டுக்கு வருகின்றன. கடந்த ஆண்டு போராட்டங்களால் ஏற்பட்ட எதிர்மறை விளைவுகளால் எதிர்பார்த்த அளவுக்கு முதலீடுகள் வரவில்லை. எனினும் பிற்பகுதியில், எதிர்பார்த்த அளவைவிட முதலீடுகள்கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## சுவையான அன்னாசி இலங்கையில் பயிரிடல்

கொழும்பு, ஏப். 18

உலகின் மிகவும் பிரபலமான சுவையான அன்னாசி வகையை இலங்கையில் பயிரிடுவதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர, விவசாய திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

'எம்.டி.2' என்ற அன்னாசி வகைக்கு உலக சந்தையில் பெரும் கிராக்கி நிலவுகின்றது. அந்த அன்னாசி வகையை எமது நாட்டில் பயிரிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்த அன்னாசி வகையை இலங்கையில் வளர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி வெற்றியடைந்துள்ளது என்றும் விவசாய அமைச்சர் குறிப்பிட்டார். (ச-இ)



## மியான்மரில் சிறையிடப்பட்ட இலங்கையருக்கு பொதுமன்னிப்பு

கொழும்பு, ஏப். 18

மியான்மரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 15 இலங்கை கடற்றொழிலாளர்களுக்கு அந்த நாட்டு அரசாங்கம் பொதுமன்னிப்பு வழங்கியுள்ளது என்றுமியான்மருக்கான இலங்கைத் தூதுவர் ஜனக பண்டார தெரிவித்துள்ளார். அதன்படி இன்னும் சில நாள்களில் அவர்களை இலங்கைக் குத் திருப்பி அனுப்ப தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது. கடந்த டிசெம்பரில், இந்தக் குழு மியான்மர் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்ட நிலையில் அவர்களுக்கு 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. ஆயினும் மியான்மரின் பாரம்பரிய புத்தாண்டை முன்னிட்டு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. (ச-இ)

## விடுமுறையை கழிக்க அமைச்சர்கள் சுற்றுலா

இருபதுக்கும் மேற்பட்ட அமைச்சர்கள் புத்தாண்டு விடுமுறையைக் கழிப்பதற்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர் என்று நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதன்படி, நாடாளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேன, கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த, இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனக பண்டார தென்னக்கோன் உள்ளிட்டோர் தற்போது வெளிநாடுகளில் இருக்கின்றனர் எனத் தெரியவருகிறது. (ச-இ)

## புதினம் தெரியுமோ?

குதிரையின் குணம் அறிஞ்சுதான் அதுக்கு கடவுள் கொம்பு குடுக்கேல. அப்பிடிக் குடுத்திருந்தால் அதின்ர வேகத்துக்கும், முரட்டுக்குணத்துக்கும் எல்லாரையும் குத்திக் கிழிச்சிருக்கும். குதிரைக்கு மட்டுமில்லை சில கதிரைகளுக்கும் கொம்பு முளைச்சால் சிக்கலாயிடும். அப்பிடி ஒரு கதிரையில வந்திருக்கிற ஒரு அம்மணி கொம்பு முளைச்சமாதிரி நடக்கிறதால அங்க வேலை செய்யவே எல்லாரும் பயப்பிட்டு தலை தெறிக்க ஓடுகினமாம். யாழ்ப்பாணத்தில உள்ள ஒப்பீஸ் ஒண்டுக்கு அவாதான் பொறுப்பா இருக்கிறா. ஒரு சட்டம் இருந்தால் அதில ஒரு இஞ்சியும் மீறக்கூடாது எண்டதில ஆள் கடும்பிடி. வேலையில நல்ல கெட்டித்தனம் உள்ள ஆள். ஆனால் இவ்வளவு இருந்தும் நாங்கள் மனிசரோட வேலை செய்யிறம் எண்ட ஒரு எண்ணம் இருக்கவேணும் எல்லோ. அது மட்டும் அவாட்ட மிஸ்ஸிங். எல்லாரையும் மிஷின் மாதிரித்தான் பாப்பா. எவ்வளவுத்துக்கு அவையிட்ட வேலை வாங்க முடியுமோ அவ்வளவுக்கு வாங்குவா. வேலைக்கு வந்தவையிட்ட உச்சபட்ச வேலையை வாங்கிறதும் ஒரு நிர்வாகத் திறமைதான். ஆனால் அதுக்காக மனச்சாட்சியைக் கழற்றி வைச்சமாதிரியான காரியங்களும் செய்யக்கூடாதெல்லோ.

இவான்ர சர்வாதிகார ஆட்சியில இருந்து எப்பிடித் தப்பலாம் எண்டுதான் அங்க வேலை செய்யிற எல்லாரும் யோசனையாம்.இப்பிடிப்பட்ட நிலையில அங்க ஒராள் வேலைக்கு போயிருக்கிறா. போய் ரண்டு, மூண்டு நாளிலேயே அவாக்கு வேலையே வெறுத்துப் போட்டுதாம்.

பொதுவா எல்லா ஒப்பீஸிலையும் 'லஞ்ச்' நேரத்தில எல்லாரும் மோட்டர் சைக்கிளில வெளியில வெளிக்கிட்டிடுவினம். அப்பிடியே போய், ஸ்கூல் முடிஞ்சதும் பிள்ளையளை ஏத்தி வீட்ட விட்டிட்டுத்தான் வருவினம். உண்மையில ரூல்ஸ்படி, அப்பிடி உத்தியோகத்தர்மார் வெளியில போகக் கூடாது தான். ஆனால் மனிதாபிமானத்தோட எல்லா டிப்பார்ட்மெண்ட் பெரியாக்களும், இப்பிடி உத்தியோகத்தர்மார் 'லஞ்ச் ரைம்' வெளியால போய் பிள்ளையளை ஏத்தி இறக்குறதுக்கு ஒண்டும் சொல்லுறேல.

ஆனால் 'சட்டம் எண்டா சட்டம், ரூல்ஸ் எண்டா ரூல்ஸ்' எண்டு கடுமையா நிக்கிற இந்த ஒப்பீஸர், புதிசா தங்கட ஒப்பீஸுக்கு வந்தவாவிட்ட 'லஞ்ச் ரைம் இஞ்ச இருந்து தான் சாப்பிடவேணும். வெளியில போய்வர ஏலாது' எண்டு மறிச்சுப்போட்டா.அங்கஸ்கூலிலதன்னை ஏத்திக்கொண்டு போக அம்மா வருவா எண்டு பிள்ளை காவல் இருந்துட்டு, பிறகு தன்ரபாட்டில நடந்து போய், பாதை மாறி ஒருவழியா வீட்ட போயிருக்கு. ஒருவேளை அந்தப்பிள்ளை அப்பிடிப் போகேக்க ஏதும் நடந்திருந்தால் ஆர் பதில் சொல்லுவினம்?அதுக்குப் பிறகு எல்லா வேலையிலையும் நொட்டை சொல்லுறதும் , எரிஞ்சு விழுகிறதுமா இருந்து இருக்கிறா. பொறுத்துப் பார்த்துப் பார்த்து ஏலாக்கட்டத்தில, இதைப்பற்றி மேலிடத்துக்கு அந்த உத்தியோகத்தர் முறைப்பாடு செய்து ' என்னை எவ்வளவு தூரத்தில வேலைக்குப் போட்டாலும் பரவாயில்லை, இஞ்சயிருந்து மட்டும் வெளியால எடுத்து விடுங்கோ' எண்டு கடிதம் போட்டிருக்கிறாவாம். ஒரு வேளை அந்தக்கடிதத்துக்கு இரங்கி அவாவுக்கு இடமாற்றம் குடுத்தாலும், புதுசா அந்த ஒப்பீஸுக்குப் போறவை என்ன பாடுபடப் போயினமோ? ஷ்ஷ்ப்பா...... அதை நினைக்க இப்பவே கண்ணைக்கட்டுதே!

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரோதி : புதுவருடப் பலன்கள்






எண்ணுவதை எழுத்தாக்கும் படைப் பாற்றல் கொண்ட நீங்கள், உழைப் பைத் தவிர வேறு எதையும் நம்பாத வர்கள். ராசிக்கு 2 ஆம் வீட்டில் இந்த குரோதி ஆண்டு பிறப்பதால் சின்னச் சின்ன ஆசைகள் நிறைவேறும். சோர்ந்து முடங்கிப் போயிருந்த உங் கள் உள்மனதில் தன்னம்பிக்கை பிறக்கும். குடும்பத்தில் நிம்மதி உண் டாகும். பிரபலங்களின் அறிமுகம் கிடைக்கும். புது வேலை கிடைக்கும்.

30.04.2024 வரை குரு ராசிக்கு 12ல் நிற்பதால் எடுத்த வேலைகளை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகமாகும். எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியாதபடி அடுத்தடுத்து செலவினங்கள் இருந்து கொண்டேயிருக்கும்.

01.05.2024 முதல் உங்களுடைய ராசியிலேயே குரு அமர்ந்து ஜென்மக் குருவாக வருவதால் உடல் நலம் பாதிக்கும். கணவன் - மனைவிக்குள் பனிப் போர் அதிகரிக்கும்.

இந்தாண்டு முழுக்க சனிபகவான் 10ஆம் இடத்திலேயே தொடர்வதால் உங்களின் கடின உழைப்புக்கேற்ற பலன் கிடைக்கும். நிர்வாகத் திறன், ஆளுமைத் திறன் அதிகரிக்கும். சிலர் சொந்தமாக தொழில் தொடங் குவீர்கள். இந்த வருடம் முழுக்க ராகு இலாப ஸ்தானத்தில் அமர்ந்திருப்ப தால் திடீர் ராஜயோகம் உண்டாகும். கணவன் - மனைவிக்குள் புரிதல் ஏற்படும்.

இந்தாண்டு முழுக்க சனிபகவான் 10இல் தொடர்வ தால் உத்தியோகத்தில் கூடுதல் நேரம் ஒதுக்கி வேலைப் பார்க்கவேண்டி வரும். உங்கள் உழைப் புக்கு வேறு சிலர் உரிமைகொண்டாடுவார்கள். சித்திரை, ஆடி, மாசி மாதங்களில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். இந்த தமிழ்ப் புத்தாண்டு இடமாற்றத்தையும், வேலைச்சுமையையும் தந்து உங்களை அலைக்கழித்தாலும் உங்களுடன் பழ குபவர்களின் உண்மை சுயரூபத்தை உணர்த்துவ தாக அமையும்.

## சொற்பொழிவும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம், ஏப். 18

தவத்திரு வேலன் சுவாமிகளின் 'ஸ்ரீமத் பகவத்கீதை விஷ்வரூப தரிசன யோகம்' எனும் தொனிப்பொருளி லான சொற்பொழிவும், கலந்துரையாடலும் சிவகுரு ஆதீன மண்டபத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட் கிழமை முதல் ஆரம்பமாகி மாலை 5 மணி தொடக்கம் 6 மணி வரை இடம்பெறவுள்ளது. (ம-100)

## மண்டலாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப். 18


மிருசுவில், உசன் கஜகேணி விநாயகர் கோவில், மண் டலாபிஷேக பூர்த்தி தின சங்குமுழுக்கு, நாளை வெள் ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கிரியைகள் ஆரம் பமாகி நடைபெறும் என கோவில் பரிபாலனசபைத் தலைவர் சி.தேவகுமாரன் அறிவித்துள்ளார். (ப-9)

## பண்டிதர் தேர்வுக்கான விண்ணப்பம் கோரல்!

யாழ்ப்பாணம், ஏப். 18

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையால் நடத்தப்படும் சைவசித்தாந்த பிரவேச பண் டிதர், சைவசித்தாந்த பால பண்டிதர், சைவ சித்தாந்த பண்டிதர் ஆகிய தேர்வுகளுக் கான விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன.

0773492306 எனும் அலைபேசி இலக் கத்துடன் தொடர்புகொள்வதன் மூலமோ அல்லது இல.66 கல்லூரி வீதி, நீராவியடி, சைவபரிபாலன அலுவலகத்தை நாடுவ தன் மூலமும் தேர்வுகளின் விவரங்களை அறியவும், விண்ணப்பத்தைப்பெறவும் முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித் துள்ளனர். எதிர்வரும் 30 ஆம் திகதி செவ் வாய்க்கிழமைக்கு முன் விண்ணப்பங் களை ஒப்படைக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)



## மருத்துவ முகாம் யாழில் சனியன்று

யாழ்ப்பாணம், ஏப். 18

யாழ். நீரிழிவுக் கழகமும், யாழ்.பல்கலைக்கழகக் கல்லூரியும் இணைந்து நடத்தும் நீரிழிவு சிகிச்சை முகாமும் விழிப்பூட்டல் செயலமர்வும் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் குருநகர் சென்.ஜேம்ஸ் தேவாலயத்தில் நடைபெற வுள்ளன.

இதன்போது நீரிழிவுப் பரிசோதனை, இரத்த அழுத்தப் பரிசோ தனை, உடல் திணிவுச் சுட்டி கணித்தறிதல், பல்பரிசோதனை, புற்றுநோய் தொடர்பான விழிப்பூட்டல், நீரிழிவைக் கட்டுப்படுத்தும் மூலிகைகளும் பயன்பாடும், கண்பரிசோதனை, மருத்துவ ஆலோசனைகள் என்பன இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச)

## மஹோற்சவம்

கொடிகாமம், ஏப். 18

அருள்மிகு கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் மஹோற்சவப் பெருவிழா கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

20 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 7 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத் திருவிழா வும், 22 ஆம் திகதி திங்கட்கி ழமை காலை 9.15 மணிக்கு தேர்த் திருவிழாவும், 23 ஆம் திகதி செவ்வாய்க்கி ழமை மு.ப. 10.30 மணிக் குத் தீர்த்தோற்சவமும் இறுதி யாக 24 ஆம் திகதி புதன்கி ழமை முற்பகல் 10 மணிக்கு மஹோற்சவ பிராயச்சித்த அபிஷேகமும் இடம்பெற வுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ள னர். (ம-159)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம், ஏப். 18

வண்ணை கோம்பயன் மணல் இந்துமயான பரிபாலனசபையின் வரு டாந்தப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத்தெரிவும் ஆறுகால்மடம், அறி வொளி கலையரங்க முன்றிலில் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கி ழமை பி.ப. 3.30 மணிக்கு நடைபெறவுள்ளன. (ப)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். துர்க்கை அம்மனை வழிபடுவது நன்று.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. சிறு சிறு சங்கடங்கள், வீண் செலவுகளும் ஏற்படக்கூடும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரையும். விநாயகர் வழிபாடு நலம் சேர்க்கும்.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்கள் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மற்றவர்களுடன் பேசும்போது மனஸ்தா பம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமை அவசியம். எதிர்பார்த்த உதவி கிடைக்க வாய்ப்பு உண்டு.

**கடகம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். நல்ல தகவல் கிடைக்கக்கூடும். உணவு விடயத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் விற்பனை சுமாராகத்தான் இருக்கும். சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். வழிபாடு நலம் சேர்க்கும்.

**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வீண் செலவுகளால் மனதில் சஞ்சலம் ஏற்படும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படும். நண்பர்களைச் சந்தித்து மகிழும் வாய்ப்பு ஏற்படும். மகாலட்சுமி வழிபாடு மகிழ்ச்சி தரும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றைத் துணிச்சலுடன் எடுப்பீர்கள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். பொறுமை அவசியம்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும். கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும். சகோதரர்களுக்காக செலவு செய்ய நேரிடும்.

**தனுசு:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்ப டும். புதிய முயற்சிகளை மேற் கொள்ளவேண் டாம். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். குடும்பத்தில் குழப்பம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**மகரம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். காரிய அனுகூலம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. மனவருத்தங்கள் நீங்கும். பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** பிறருக்குக் கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. எதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும் முடிந்துவிடும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். நண்பர்களிடம் எதிர்பார்த்த காரியம் சாதகமாகும்.

**மீனம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். ஆனால், தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். உறவினர்கள் வகையில் வீண் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




## தமிழர் முன்னுள்ள இரு தெரிவுகள்

'தமிழர் தரப்பில் பொதுவேட்பாளரை நிறுத்துவது சாத்தியமற்றது. அத்தகைய முடிவை தமிழ்க் கட்சிகள் எடுக்கமாட்டாது' என இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் வவுனியாவில் வைத்துக் கூறியுள்ளார். இதையொத்த கருத்தையே அரசாங்கத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் ஈ.பி.டி.பி.யும் கூறியிருக்கின்றது. அந்தக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, ரணிலை ஆதரிப்பதற்கு வெளிப்படையாகத் தீர்மானித்து அறிவித்தும் விட்டார். அதனால் தமிழ்ப் பொது வேட்பாளரை எதிர்க்கின்றார். இதேபோல தமிழ்ப் பொது வேட்பாளரை எதிர்க்கின்ற நிலைப்பாட்டை தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்குவதாகச் சொல்லிக்கொள்ளும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் அவரது அணியினரும் எடுத்திருக்கின்றனர். அவர்களை ஆதரிக்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் இரா.சம்பந் தனும் கருத்துரைத்திருக்கின்றார். இலங்கை அரசாங்கத்தின் ஆளும் தரப்பினரும், தமிழ்த்தேசிய அரசியல் பரப்பிலே சுமந்திரன் அணியினரும் ஒரே நிலைப்பாட்டையே ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் எடுத்திருக்கின்றனர்.

சுமந்திரன் அணியினர் மீது தொடர்ச்சியாக தமிழ்த் தேசிய நீக்க அரசியலை முன்னெடுப்பதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றன. குறிப்பாக நடைபெற்று முடிந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவுக்கான தேர்தலின்போது கூட இந்த விவகாரம் எதிரொலித்திருந்தது. நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தமிழ்த் தேசியத்துக்கு ஆதரவானவராகவும், சுமந்திரன் தமிழ்த் தேசியத்துக்கு எதிரானவராகவும் அடையாளப்படுத்தப்பட்டிருந்தனர். அதைச் சரியென நிரூபிக்கும் வகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான நிலைப்பாடு அமைந்திருக்கின்றது.

தென்னிலங்கைத் தலைவர்களை ஆதரித்து தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டிருக்கின்றனர். குறிப்பாக சம்பந்தன் - சுமந்திரன் இருவரும் கண்ணைமூடிக்கொண்டு நல்லாட்சிக்காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவிடம் சரணடைந்திருந்தனர். புதிய அரசமைப்பு வரும் வரும் என்று சொல்லியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெற்றார் ரணில் விக்கிரமசிங்க. அவரது அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை, வரவு-செலவுத் திட்ட வாக்களிப்பு ஆகியவற்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சம்பந்தன் - சுமந்திரன் இருவரையும் தவிர்த்து ஏனையோர் எதிர்த்தபோது 10 நிபந்தனைகளை விதித்து அவற்றை ரணில் ஏற்றுக்கொள்வதாக ஒப்பந்தத்தைப்பெற்ற இந்த இருவரும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களை வைத்து, நல்லாட்சி அரசாங்கத்தைக் காப்பாற்ற உதவினர். ஆனால் அந்த நிபந்தனைகளில் ஒன்றைக்கூட ரணில் நிறைவேற்றவில்லை. ஆகக் குறைந்தது கல்முனை தமிழ் பிரதேச செயலகத்துக்கு கணக்காளரைக்கூட நியமிக்கவில்லை. இத்தகைய பட்டறிவைப் பெற்ற பின்னரும் கூட, தென்னிலங்கைத் தலைவர்களுக்கு தங்கள் இரு கரங்களையும் இவர்கள் உயர்த்துவதை தமிழ்த்தேசிய விரோத நடவடிக்கை என்று அடையாளப்படுத்தாமல் வேறு எப்படிச் சொல்லமுடியும்?

நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் பொதுவேட்பாளரை நிறுத்துவதை இவர்கள் கடுமையாக எதிர்ப்பதன் பின்னணியில் தமிழ்த் தேசிய அரசியல் இருக்காது என்பது நிரூபணமாகின்றது. வெறுமனே, இனப்படுகொலையாளி ராஜபக்சவுக்கு ஆதரவான நிலைப்பாடு இது என்று பொத்தம் பொதுவில் சொல்லிவிட்டு அவர்கள் கடந்து செல்லவும் முடியாது. ஏனெனில், ராஜபக்சவை தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அதேபோல தென்னிலங்கையில் இப்போதைய நிலைமையில் ஜனாதிபதி போட்டிக்களத்தில் நிற்கும் ரணிலோ, சஜித்தோ, அநுரவோ ராஜபக்சக்களுக்குச் சற்றும் சளைத்தவர்கள் இல்லை. அவர்களும் பௌத்த - சிங்கள பேரினவாத நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கும் கருவிகளே. எனவே தமிழ் மக்கள் தீர்க்கமாக சிந்தித்து தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிக்கவேண்டும். அல்லது தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும். இவை யிரண்டுமே இப்போது தமிழர்கள் முன்னாலுள்ள தெரிவுகள்.





## ஈரானுடன் உறவை வலுப்படுத்துங்கள்!

### ஐ.ம.ச. கோரிக்கை

கொழும்பு, ஏப். 18


**ஈரானுடன் இலங்கை அரசாங்கம் தனது உறவை வலுப்படுத்தவேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.**

எவ்வித உள்நோக்கமும் இன்றி, இலங்கையின் வளங்களைக் குறிவைக்காமல் இலங்கைக்கு உதவிகளை வழங்கிவரும் ஈரான் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளுடன் அரசு உறவை வலுப்படுத்தவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார். "அரபுலகுடன் இலங்கை கடந்த காலங்களில் சிறந்த நட்புறவைப் பேணியது. இலங்கையின் அபிவிருத்திக்கு அரபுலகம் உதவிகளை வழங்கியது. வட்டி இல்லாத கடன்கூட வழங்கப்பட்டுள்ளது. மத்திய கிழக்கில் பல இலங்கை யர்கள் பணியாற்றுகின்றனர். இந்நிலையில் ஈரான் ஜனாதிபதி இலங்கை வருவது நல்லது. எவ்வித உள்நோக்கமும் இன்றி உதவிகளை வழங்கும் இவ்வாறான நாடுகளுடன் உறவை வலுப்படுத்துவது எமது நாட்டின் பொருளாதாரத்துக்குப் பலமாக அமையும்" என்று முஜிபுர் ரஹ்மான் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-44)

## இலங்கை - பாகிஸ்தான் கலாசார உறவு மேம்பாடு

கொழும்பு, ஏப். 18

இலங்கை – பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையில் கலாசாரத் தொடர்புகள் மற்றும் ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பாகிஸ்தானில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரதம ஆணையாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பாஹிம் உல் அஸீஸுக்கும் பௌத்த, சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவும் இடையில் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பிலேயே இந்த விடயம் ஆராயப்பட்டுள்ளது. (ச-இ)



## எரிபொருள் நுகர்வு அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 18

இலங்கையில் மாதாந்த எரிபொருள் விற்பனை அதிகரித்து வருகிறது என்று மின்சார மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த மார்ச் மாதத்தில் எரிபொருள் விற்பனையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## அரச வாகனங்களை கைவிடாத கெஹலிய

கொழும்பு, ஏப். 18

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையிலும் அவர் அமைச்சராக இருந்தபோது அவருக்கு வழங்கப்பட்ட இரண்டு உத்தியோகபூர்வ வாகனங்களை அவர் கையளிக்கவில்லை என்று சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். அந்த வாகனங்கள் அவரது குடும்ப உறுப்பினர்களால் பயன்படுத்தப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

## தமிதாவுக்கு மறியல் நீடிப்பு

நிதி மோசடிக் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட நடிகை தமிதா அபேரத்னவுக்கும் அவரது கணவருக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் அவர்கள் நேற்று முற்படுத்தப் பட்டபோதே எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-இ)

### நாளை

19.04.2024

**வெள்ளிக்கிழமை**

**சித்திரை - 06**

சுபநேரம் : 06.02 - 07.32

ராகுகாலம் : 10.32 - 12.02

### நாளொரு நல்வார்த்தை

**உன் வேதனை பலரை சிரிக்க வைக்கலாம். ஆனால், உன் சிரிப்பு ஒருவரைக் கூட வேதனைப்படுத்தக் கூடாது.**

**— சார்லி சப்ளின்—**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானுக்கு எதிராக பொருளாதாரத்தடை

## அமெரிக்கா தீவிர பரிசீலனை



தெஹ்ரோன், ஏப். 18

**ஈரானுக்கு எதிராகப் புதிய பொருளாதாரத் தடைகளை விதிப்பது தொடர்பில் அமெரிக்கா பரிசீலித்து வருகின்றது.**


எதிர்வரும் நாள்களில் ஈரானுக்கு எதிராக புதிய தடைகள் விதிக்கப்படும் எனக் குறிப்பிட்டு அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சுல்லிவன் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

சிரியாவில் உள்ள ஈரான் தூதரகம் கடந்த முதலாம் திகதி இஸ்ரேலால் தாக்கப்பட்டதற்குப் பதிலடியாக இஸ்ரேல் மீது ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்களைக் கொண்டு கடந்த சனிக்கிழமை ஈரான் தாக்குதல் நடத்தியது.

அமெரிக்காவின் உதவியுடன் அந்தத் தாக்குதலை இஸ்ரேல் வெற்றி கரமாகக் கையாண்டபோதிலும், இஸ்ரேலின் தென்பகுதியிலுள்ள இராணுவத்தளம் பகுதியளவில் தாக்கப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே, ஈரான் மீது புதிய பொருளாதாரத்தடைகள் விதிக்கப்படவுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

முன்னதாக, ஈரானுக்கு பதில் தாக்குதல் நடத்தக்கூடாது என்றும், பொருளாதாரத்தடைகள் மூலம் ஈரானுக்கு செய்யவேண்டியதை அமெரிக்கா செய்யும் என்றும் எச்சரித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம)



# வளர்ச்சி கண்டுள்ள சீனப் பொருளாதாரம்

பீஜிங், ஏப்.18

சீனப் பொருளாதாரம் மதிப்பீட்டைவிடவும் 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் பெரும் வளர்ச்சி கண்டுள்ளது என்று சீனாவின் தேசிய புள்ளி விவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரையான பொருளாதார வளர்ச்சி 4.8 வீதமாக மதிப்பிடப்பட்ட நிலையில் 5.3 வீதமாக வளர்ச்சி கண்டுள்ளது என்றும், உலகின் சிறந்த பொருளாதாரங்களில் இரண்டாவது வளர்ச்சி வீதம் எனவும் தெரிவிக்கப்படு கின்றது.

கடந்த வருடத்தைவிட ஏற்றுமதி 7.5 வீதம் சரிந்துள்ளது என்று சீனா அறிவித்த சில நாள்களுக்குப் பின்னர் பொருளாதார வளர்ச்சி குறித்த தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

வலுவான முதல் காலாண்டு வளர்ச்சியானது தற்போதைய சீன அரசாங்கத்தின் நிலையான கொள்கைக்கு வசதியாகக் காணப்படும் எனத் தெரிவிக்கப் படுகின்றது. (எ-இ)

# 30 ஆண்டுக்கு முன் திருடிய பணத்தைக் கொடுத்த திருடன்


குர்திஷ்தான், ஏப்.18

30 வருடங்களுக்கு முன்னர் திருடிய பணத்தை திரும்ப ஒப்படைத்து, மன்னிப்புக் கோரிய சம்பவம் ஒன்று ஈராக்கில் குர்திஷ்தான் மாகாணத்திலுள்ள சுலைமானியா நகரில் இடம்பெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை ஹிர்ஸ்க் கரீம் என்பவரின் வீட்டுக்கதவை ஒருவர் தட்டியுள்ளார். வீட்டிலிருந்த பெண் கதவைத் திறந்தபோது முகமூடி அணிந்திருந்த ஒருவர் பெண்ணின் கையில் பை ஒன்றை அவசர அவசரமாகத் திணித்துவிட்டுச் சென்றுவிட்டார். பையைத் திறந்து பார்த்தபோது அதனுள் 300 அமெரிக்க டொலர் பெறுமதியான பணமும், கடிதமொன்றும் காணப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில், "30 வருடங்களுக்கு முன்னர் நீங்கள் வீட்டில் இல்லாத நேரம் பார்த்து உங்களது தந்தையின் பணத்தை நான் திருடிச்சென்றுவிட்டேன். அன்று என்னிடம் கையில் பணம் எதுவும் இல்லாமையால்தான் திருடிச்சென்றேன். என்னை மன்னியுங்கள்" என எழுதப்பட்டிருந்தது. இந்தக்கடிதம் இப்போது சமூக ஊடகங்களில் வைரலாகி வருகிறது. (எ-6)

# வெள்ளத்தில் மூழ்கிய ஐக்கிய இராஜ்ஜியம்



டுபாய், ஏப். 18

ஐக்கிய அரபு அமீரகம் முழுவதும் நேற்றுமுன்தினம் பெய்த கனமழையால் விமானப் போக்குவரத்து பாதிக்கப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கனமழையால் பல்வேறு இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. வீதிகளில் நீர் தேங்கியதனால் பல இடங்களில் வாகனப் போக்குவரத்தும் முடங்கியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, டுபாயிலுள்ள டுபாய் மோல், அமீரக மோல் உள்ளிட்ட வணிக வளாகங்கள் மற்றும் பிற முக்கியமான கட்டடங்களிலும் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

அத்துடன் ஓமான் நாட்டில் கனமழை மற்றும் பெருவெள்ளத்தினால் 18 பேர் பலியாகி உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)


## புதுக்குடியிருப்பு பிரதேச சபை, புதுக்குடியிருப்பு.

### புதுக்குடியிருப்பு சந்தைக் கடைகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2024

புதுக்குடியிருப்பு சந்தை வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு சொந்தமான கடை இல 02, கடை இல 03 என்பன நீண்டகால குத்தகையில் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரப்படுகின்றது.

**கேள்விப் பத்திரங்கள் வழங்கும் காலம் :-** 18.04.2024 முற்பகல் 9.00 மணி தொடக்கம் 02.05.2024 பிற்பகல் 01.30 மணிவரை (அலுவலக நாட்களில் மட்டும்)

**கேள்வி திறக்கப்படும் திகதி :-** 02.05.2024. பிற்பகல் 02.00 மணி

| கடை இலக்கம் | ஆகக் குறைந்தகேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|
| கடை இல 02 | ரூபா. 1,440,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 03 | ரூபா. 1,680,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |

1. கேள்விப்பத்திரங்களின் இரு பிரதிகளும் **தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, புதுக்குடியிருப்பு பிரதேச சபை, புதுக்குடியிருப்பு.** என முகவரியிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **புதுக்குடியிருப்பு சந்தைக் கடை இல.....** என கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். இரு கேள்விகளும் கேள்வி திறத்தல் நேரத்திற்கு முன்பு கிடைக்கப்பெறல் வேண்டும். கேள்வி நேரத்தின் பின்னர் கிடைக்கும் படிவங்கள் நிராகரிக்கப்படும்
2. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
3. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் தாங்கள் தெரிவுசெய்யப்பட்ட திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் கேள்வித் தொகையின் முழுத்தொகையையும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
4. கேள்விப்பத்திரத்தினை பெற விரும்புவோர் **முல்லைத்தீவு மாவட்ட எல்லைக்குள்** நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டிருப்பதுடன் விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்திய பிரதி அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏதேனும் ஓர் ஆவணத்தின் உறுதிப்படுத்திய பிரதி, தாம் வதியும் கிராம சேவையாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவிடத்தின் வதிவிட சான்றிதழ் மூலப்பிரதி ஆகியவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.
5. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் நேரடியாக அல்லது தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்தியபெறுகைக் குழு,**
**புதுக்குடியிருப்பு பிரதேசசபை,**
**புதுக்குடியிருப்பு.**
**2024.04.18.**
**தொலைபேசி இல: 0212291023 email-pkipsmullai@gmail.com**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களிடையே வயிற்றுப்போக்கு!

## மருத்துவர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 18

சம காலங்களில் குழந்தைகளிடையே வயிற்றுப்போக்கு நோய் குறிப்பிடத்தக்க அளவில் பரவுகின்ற நிலையில் பெற்றோர் எச்சரிக்கையுடன் செயற்படுமாறு மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

நீடிக்கப்பட்ட விடுமுறை நாள்களைத் தொடர்ந்து குழந்தைகளி டையே வயிற்றுப்போக்கு அதிகம் பரவி வருகிறது.

பெற்றோர் குழந்தைகளுக்கு உணவளிக்கும்போது கூடிய விழிப்புடன் இருக்கவேண்டும். வயிற்றுப்போக்கு நோய் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்புக்கு இரண்டாவது முக்கியமான காரணமாக உள்ளது என உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)


## மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி

கிறீன் கிங்ஸ் சனசமூக நிலையத்தின் 59 வது ஆண்டு விழாவை முன்னிட்டு ஆண்களுக்கான மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி எதிர்வரும் 20.04.2024 சனிக்கிழமை காலை 6.00 மணியளவில் நடைபெற இருப்பதனால் பங்குபற்ற விரும்பும் வீரர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்களது பதிவுகளை மேற்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**அனுமதி இலவசம்**

**077 284 5586** - நிரான்ஸ்
**070 644 2468** - றொக்ஸ்மிலன்

செயலாளர்.

(CS/54747) J-1

## வீடு வாடகைக்கு

இல 60 வளாக வீதியில்,
**பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி, புகையிரத நிலையம்**
ஆகியவற்றிற்கு மிக அருகில்
அமைந்துள்ள **03** அறைகள் கொண்ட
**வீடு வாடகைக்கு உண்டு.**

தொடர்பு:- **077 604 7749**

(CS/54756) J-1

## காணி விற்பனைக்கு


உசனில் பயன்தரும்
தென்னைமரங்களுடன்,
குழாய்க் கிணற்றுடன்,
இரட்டைக் கதவுடன்
**காணி விற்பனைக்கு உண்டு.**

தொடர்பு:- **077 456 7091**

(CS/41973) J-1


## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 . 12 . 1947 | 16 . 04 . 2024 |



### பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் (காப்பியதாசன்)

**(ஓய்வுபெற்ற ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம், வருகை விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்)**
**கலாபூசணம், B.Sc (Visual Com. in English), M.A Tamil (Hons), J.P முன்னாள் செயலாளர், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்)**

சிந்துபுரம், வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் நவரத்தினம் கடம்பேசுவரன் அவர்கள் கடந்த (16.04.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசிரியர் நவரத்தினளம் - பாக்கியம் தம்பதியரின் இரண்டாவது புதல்வரும், மகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - நல்லம்மா தம்பதியரின் மருமகனும், மணிமார்பன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வி அமைச்சு), ஆரணி (மருந்தாளர், நோர்வே), துளசிவர்மன் (முகாமைத்துவப் பணிப்பாளர், Canopus Pvt, Ltd) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தஜனி (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), நிர்மலன் (பொறியியலாளர், நோர்வே), திர்சிகாயினி (B.Sc Agriculture) ஆகியோரின் அன்பு மாமனாரும், அறிவரன், பகலோன், பாகவி, பாவலன், ஆதித்தி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற உமாமகேஸ்வரன், கதிர்காமேஸ்வரன், செந்திலேஸ்வரன், கணேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற நாகேஸ்வரியம்மா, இரத்தினேஸ்வரி, இந்திராணி, திருக்கேதீஸ்வரி காலஞ்சென்றவர்களான கனகேஸ்வரியம்மா, ஏகாம்பரம், தியாகராசா, இராசம்மா, பரமேஸ்வரி, கமலாசனி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2024) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


**தகவல்: குடும்பத்தினர்.**

**க.மணிமார்பன் - 0777 981523**
**க.துளசிவர்மன் - 077 228 1802**
**நி.ஆரணி**
**கதிர்காமேஸ்வரன் -**
**செந்திலேஸ்வரன் - 077 929 7084**
**கணேஸ்வரன்**

(CR 42229) A-1

## மரண அறிவித்தல்

| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 02 . 11 . 1934 | 11 . 04 . 2024 |



### சூசைப்பிள்ளை பெஞ்சமின் அருமைநாயகம்

**பொறியியலாளர்**
**(Chairman - Arumainayagam Associates, Pedro Coolers Ltd, Pedro Export Ltd)**

வல்வெட்டித்துறை நெடியகாட்டைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியையும், தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சூ.பெஞ்சமின் அருமைநாயகம் அவர்கள் கனடாவில் கடந்த 11.04.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை (சின்னத்தம்பு) - விறிசிற்றம்மா (மங்களம்) தம்பதியினரின் சிரேஸ்ர புதல்வனும், யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதி காலஞ்சென்றவர்களான கிறிஸ்ரியன் - யோசெபின் தம்பதியினரின் மருமகனும், மேள் திரேஸ் புஸ்பராணியின் அன்புக்கணவரும், இமானுவல் இளங்கோ, மைக்கல் இளஞ்சேரன், கிறிஸ்ரலின் வாசுகி ஆகியோரின் அன்புத் தந்தையும், பெனிற்றா இளஞ்சேரன், யேசன் பிறவுன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பியானா சங்கீதா, பெஞ்சமின் திலிபன், அகிலா அஞ்சலி, நைலா அகிலா, றூபி ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற மேரிராணி ஜெயராஜா மற்றும் சேவியர் குலநாயகம், காலம்சென்ற மேரி அமலோற்பவநாயகி ஜெயநாதன் மற்றும் விக்ரர் தனிநாயகம் (அவுஸ்திரேலியா), திருமதி மேரி நிர்மலா அருச்சுனா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான லெறி, பவளராஜா மற்றும் திருமதி லினெற் இரத்தினசிங்கம், காலஞ்சென்ற அமிர்தராஜா மற்றும் யோகராஜா, திருமதி இமாகுலெற் ஜோர்ஜ் நீக்கிலஸ், சுகிர்தராஜா, குணராஜா, திருமதி சென் ஜீன் ஈஸ்வரி டொமினிக் ராஜன் மற்றும் காலஞ்சென்ற R.E.C. ஜெயராஜா மற்றும் திருமதி தேவஜோதி குலநாயகம், காலஞ்சென்ற அன்ரனி ஜெயநாதன் மற்றும் Dr.சுசிலா தனிநாயகம் (அவுஸ்திரேலியா), அருச்சனா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் (19.4.2024) வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணி தொடக்கம் 9.00 வரையும், 20.4.2024 சனிக்கிழமை காலை 9.00 தொடக்கம் 10.00 வரையும், St.John's Dixie Cemetery & Crematorium இல் பார்வைக்காக வைக்கப்படும். நல்லடக்க ஆராதனை 20.4.2024 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கனடா மிசிசாகாவில் உள்ள மாத்தா மரியாள் தேவாலயத்தில் நடைபெற்று அசும்சன் கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் இடம்பெறும். இவ்வறிவித்தலை உற்றார்.உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**


**36. மார்ட்டின் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**சூ.சேவியர் குலநாயகம் - சகோதரன் - 0778617740**
**இமானுவெல் இளங்கோ - மகன் - 0014167559655**

(CS/54757) J-1

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 . 08 . 1950 | 16 . 04 . 2024 |



### தம்பிராசா பரமசிவம்

வேலணை மேற்கு, தலைகாட்டியைப் பிறப்பிடமாகவும், நோர்வே டிறம்மனை (Drammen) நிரந்தர வதிவிடமாகவும், சுதுமலையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட தம்பிராசா பரமசிவம் அவர்கள் நேற்று முன்தினம் (16.04.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா - அன்னம்மா தம்பதியரின் இளைய புத்திரனும், காலஞ்சென்ற சண்முகரட்ணம் - பத்மாவதி தம்பதியரின் மருமகனும், சந்திரவதியின் (விமலா) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஞானானந்தம், சிவசுப்பிரமணியம், சிவலிங்கம், சண்முகநாதன், கனகசுந்தரம் (இராசதுரை) மற்றும் மகாலிங்கம், தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகாதேவன், காந்திமதி, இந்துமதி, வாசுதேவன் (கண்ணன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.04.2024) வெள்ளிக்கிழமை பி.ப 02.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப 03.30 மணியளவில் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் [illegible].

**33, [illegible] ஒழுங்கை,**
**சுதுமலை.**

(CS 00241) S-1

**தகவல்:**
**சந்திரவதி பரமசிவம் (விமலா) மனைவி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் இன்றும் வெப்பம் எகிறும்!

கொழும்பு, ஏப். 18

வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அத்துடன் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலும் இன்று அதிகரித்த வெப்பநிலை காணப்படுமென சிரேஷ்ட வானிலை அதிகாரி கலாநிதி மொஹமட் சாலிஹீன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மத்திய, சப்ரகமுவ, மேல், வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களின் பல இடங்களிலும் அத்துடன் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் பல இடங்களிலும் பிற்பகல் இரண்டு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும்.

சப்ரகமுவ, மேல் மற்றும் வடமேல் மாகாணங்களின் சில இடங்களில் 50 மில்லிமீற்றர் வரையிலான ஓரளவு பலத்த மழை பெய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களிலும் காலை வேளையில் பனிமூட்டம் காணப்படும். பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மன்னார் தொடக்கம் கொழும்பு, காலி, மாத்தறை ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடல் பிராந்தியங்கள் ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும். நாட்டைச் சூழ உள்ள கடல் பிராந்தியங்கள் மிதமான அலையுடன் காணப்படும். இடியுடன்கூடிய மழை பெய்கின்ற சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசுவதுடன் அவ்வேளைகளில் கடல் பிராந்தியங்கள் மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும்- என்றார். (ம)



# சுற்றுலாப் பயணியை ஏமாற்றியவருக்கு பிணை

கொழும்பு, ஏப். 18

கொழும்பு புதுக்கடைப் பகுதியிலுள்ள உணவகத்தில் சுற்றுலாப் பயணியை ஏமாற்றி பணம் பறிக்க முயன்ற உணவு விற்பனையாளர் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட் டுள்ளார்.

உணவுபெற்றுக் கொள்ளச் சென்ற சுற்றுலாப் பயணியிடம் கொத்துரொட்டியின் விலை 1,900 ரூபாவெனக் கூறி ஏமாற்ற முற்பட்ட குற்றத்தில் குறித்த உணவக ஊழியர் கைதுசெய்யப்பட்டார். அவரை நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியபோதே 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 10 இலட்சம் ரூபா சரீரப் பிணையிலும் அவரை விடுவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-இ)

# விஜயதாஸ சொல்வது பொய்

ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராகக் களமிறங்குமாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சி விஜயதாஸ ராஜபக்சவிடம் கோரிக்கை விடுக்கவில்லை என்று அக் கட்சியின் உறுப்பினரும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளருமான திலங்க சுமதிபால தெரிவித்தார்.



ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராக களமிறங்குமாறு சுதந்திரக்கட்சியின் மத்தியகுழு உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ள கருத்து தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

'அவ்வாறானதொரு திட்டம் இல்லை, அது பற்றி கோரிக்கை விடுக்கப்படவும் இல்லை. விஜயதாஸ ராஜபக்ச அரசு பக்கமே உள்ளார். ஆளுங்கட்சிப் பக்கம் உள்ளவர்களுடன் கொடுக்கல் வாங்கல் கிடையாது.' எனவும் திலங்க சுமதிபால குறிப்பிட்டார். (ஒ-44)


## INVITATION FOR BID 2024 / 02
## Regional Directorate of Health Service Jaffna

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a grant from World Bank towards the cost of Primary Health Care System Strengthening Project (PSSP)-2023 and intends to apply part of the proceeds of this grant to payments under the contracts listed below in the table.
2. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Director of Health Services, Regional Directorate of Health Services, NP, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
3. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
"Bidding will be conducted through National Competitive Bidding Since the Estimated Value of Work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016 (iii).
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
5. Qualification' requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 documents.
6. Interested bidders may obtain further information from address given below in 7 and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to 15.00 hrs.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Regional Directorate of Health Services,No 572/3 Hospital Road Jaffna. (T.P:0212227889, Fax:0212220822) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment should be by cash.
8. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, No 572/3 Hospital Road, Jaffna on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
9. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, 572/3 Hospital Road, Jaffna on commencing at 2.30 P.M on the date mentioned in the table.
10. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table

| CATEGORY II | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | From 18.04.2024 until 30.04.2024 |
| | Pre-Bid Conference | At 2.30 P.M on 25.04.2024 |
| | Closing and Opening of Bids | At 10.30 A.M on 02.05.2024 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security: Security Amount | Required Bid Security: Validity Period |
|---|---|---|---|---|---|---|---|
| NP/04/41/2024/PSSP/W/11 | Improvement work to Water Supply at DH Mandaitivu | 1.33 | 73Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 13,500.00 | Till 18.07.2024 |
| NP/04/41/2024/PSSP/W/12 | Renovation of Access Ramp & Dental Unit Shift at DH Varani | 1.69 | 76Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 17,000.00 | Till 18.07.2024 |
| NP/04/41/2024/PSSP/W/13 | Improvement Work at BH Tellippalai | 1.69 | 76Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 17,000.00 | Till 18.07.2024 |
| NP/04/41/2024/PSSP/W/14 | Renovation of Roof at PMCU Uduvil | 0.22 | 25Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 3,000.00 | Till 18.07.2024 |
| NP/04/41/2024/PSSP/W/15 | Electrical Connection works for 1st & 2nd Floor of Store Modifiying as RDHS Office Pannai | 1.87 | 78Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 19,000.00 | Till 18.07.2024 |
| NP/04/41/2024/PSSP/W/16 | Improvement Work at Bhase Hospital Chavakachcheri-OPD | 0.82 | 73ays | C9 and C8 (Buildings) | 1,500.00 | 8,200.00 | Till 18.07.2024 |
| NP/04/41/2024/PSSP/W/17 | Improvement Work at DH Delft | 0.84 | 68Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 8,500.00 | Till 18.07.2024 |
| NP/04/41/2024/PSSP/W/18 | Renovation of Kitchen & OPD at DH Pandatharippu | 0.84 | 68Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 8,500.00 | Till 18.07.2024 |
| NP/04/41/2024/BM/W/01 | Renovation of Doctors Quarters at DH Analaitivu | 1.69 | 76Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 17,000.00 | Till 18.07.2024 |

Chairman
Regional Procurement Committee
Regional Directorate of Health Service,
Jaffna


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதியோர் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஏப். 18

தென்மராட்சிப் பிரதேச, பொதுசன மாதாந்த உதவிப்பணம் மற்றும் முதியோருக்கான கொடுப்பனவுகள் என்பன பிரதேச அஞ்சல் அலுவலகங்களில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

கொடுப்பனவை எதிர்வரும் 25ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர்பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-9)

## இலவச அரிசி

யாழ்ப்பாணம், ஏப். 18

தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள நலிவுற்ற குடும்பங்களுக்கு, கிராம அலுவலர் பிரிவு ரீதியாக எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் இலவச அரிசி வழங்கப்படவுள்ளது. (ப-9)


## 6ம் ஆண்டு நினைவு நாள்

மலர்வு 05.01.1950



உதிர்வு 24.04.2018

அமரர்

### தம்பிமுத்து சிவபாதம்

அணையாத தீபமாக எம்முடன் வாழ்ந்த
எங்கள் அன்புத் தெய்வம் நீங்கள்
அன்பின் பல பரிமாணங்களின் கலவை
பாசமுள்ள தந்தை நேசமுள்ள மாமா
பேரன் பேர்த்திகளுக்கு ஏற்ற தாத்தா!!
தேவைகள் அறிந்து நீண்ட உதவிக்கரம்
உங்கள் கருணை இதயம் முற்றும் வந்த
சுற்றத்தாரை
அரவணைத்த விதம் மனதுக்கு ஔடதம்
மண் சார்ந்தும், மண்ணில் விளையும் பயிர்
சார்ந்தும்,
பயிரை நம்பி வாழும் உயிர்கள் சார்ந்தும்
உங்கள் போதனை சேவைதான் எனினும்
காலத்தின் தேவை
எம்மை பிரிந்து காலங்கள் ஓடினாலும்
நீங்கள் எங்களிடம் விட்டுச்சென்ற பண்புகளால்
என்றுமே வாழ்கிறீர்கள்
எங்கள் இதயத்தில் அப்பா!!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
என்றென்றும் இறைவனை
பிரார்த்தனை செய்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(CS/227) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 21.08.1941



மறைவு 15.04.2024

### திருமதி பத்மநாதன் பரமேஸ்வரி

(தங்கச்சி அக்கா)

பிறவுன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மநாதன் பரமேஸ்வரி கடந்த 15.04.2024 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - நாகம்மா தம்பதியரின் ஏக புதல்வியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சரஸ்வதி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பத்மநாதனின் (முன்னாள் பதில் ஆணையாளர், யாழ் மாநகரசபை) அன்பு மனைவியும், சுரேந்திரன் (ஜேர்மனி), சிவேந்திரன் (கனடா), குமரேந்திரன் (கனடா), மயூரதி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜனப்பிரியா (ஜேர்மனி), சாளினி (கனடா), றாதிகா (கனடா), மகேந்திரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், வலயக்கல்வி அலுவலகம், தீவகம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பத்மஜன், ஜனோஜன் (ஜேர்மனி), விதுஷன், வர்ஷனா, கிஷா, ஹைறா, ரஷ்வின் (கனடா), விஷ்ணுஜா, டினோஜா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், தியாகராசா, சிவசுப்பிரமணியம், சண்முகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இந்திராதேவி, கமலாதேவி மற்றும் வாமதேவி, சரோஜினிதேவி, பரமேஸ்வரி காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் புனிதவதி, இராசலட்சுமி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2024) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

185/6, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(CR/42225) J-1

தகவல்:
குடும்பத்தினர்.
T.P: 077 691 5303


## குஜராத்தை பந்தாடிய டெல்லி கபிடல்ஸ்!

ஐ.பி.எல். தொடரின் 32 ஆவது லீக் ஆட்டத்தில் குஜராத் டைட்டன்ஸ் அணியை 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது டெல்லி கபிடல்ஸ் அணி. 90 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை இலகுவாக எட்டியது டெல்லி அணி.

அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி கிரிக்கெட் மைதானத்தில் நேற்று இந்த ஆட்டம் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணி 17.3 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 89 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் குஜராத் அணி பெற்ற மிகக் குறைந்த ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். அந்த அணி சார்பாக ரஷித் கான் மட்டும் 31 ஓட்டங்கள் எடுத்தார். ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் வருவதும் போவதுமாகவே இருந்தனர்.

டெல்லி அணி சார்பாக முகேஷ்குமார் 3 விக்கெட்டுக்களையும், ஸ்டப்ஸ் மற்றும் இஷாந்த் சர்மா ஆகியோர் இரு விக்கெட்டுக்களையும், அக் ஷர் படேல் மற்றும் கலீல் அகமது ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

90 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி ஆட்டத்தை ஆரம்பித்த டெல்லி அணி ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடியது. 8.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 92 ஓட்டங்களை எடுத்து வெற்றி இலக்கை அடைந்தது டெல்லி அணி.

மெக்குர்க் 20 ஓட்டங்களையும், அபிஷேக் போரல் 15 ஓட்டங்களையும், ஷாய் ஹோப் 19 ஓட்டங்களையும், பிரித்வி 7 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர். சுமித் குமார் 9 ஓட்டங்களுடனும் பந்த் 16 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது இருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் புள்ளிகள் பட்டியலில் 6ஆவது இடத்துக்கு முன்னேறி உள்ளது டெல்லி கபிடல்ஸ். (ஏ)

### பட்டியில்...

யிடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் ஆடுகளைத் களவாடிய குற்றச்சாட்டில் ஒருவரையும், களவாடப்பட்ட ஆடுகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண் உட்பட இருவரையும் கைது செய்துள்ளனர்.

நான்கு பேர் கொண்ட கும்பல் ஒன்று வாகனத்தில் வந்து ஆடுகளைக் கடத்தியுள்ளது. ஆள்கள் நடமாற்றம் அற்ற நேரத்தில் பட்டிக்குள் புகுந்த அந்தக் கும்பல் அங்கிருந்த இரு மேய்ப்பர்களைத் தாக்கிவிட்டு ஆடுகளைக் கொள்ளையிட்டுள்ளது. கொள்ளையிடப்பட்ட ஆடுகளின் பெறுமதி சுமார் 10 இலட்சம் ரூபா என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆடுகளைத் திருடிய கும்பல் ஆடுகளைப் பங்கிட்டுச் சென்றுள்ளமை விசாரணைகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வவுனியா, நெடுங்கேணியிலிருந்து 15 ஆடுகள் மீட்கப்பட்டுள்ளன. ஆடுகள் திருடிய குற்றச்சாட்டில் ஒருவரும், கவர்ந்து செல்லப்பட்ட ஆடுகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண் (சந்தேகநபரின் மனைவி) உட்பட இருவரும் புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணைகளின் அடிப்படையில் களவாடப்பட்ட ஆடுகளின் ஒரு தொகுதியை இருவர் நெடுங்கேணிப் பகுதிக்கும், ஏனையோர் மாங்குளம், கனகராஜன்குளம் ஆகிய இடங்களுக்கும் கொண்டு சென்றுள்ளனர் என்று அறியப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். கொள்ளையிட்ட ஆடுகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர் கொள்ளைக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை, கொள்ளைக் கும்பலின் தாக்குதலுக்கு இலக்கான மேய்ப்பர்களில் ஒருவர் புதுக்குடியிருப்பு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (அ-எ-19)

### நயினாதீவு...

இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது.

நயினாதீவைச் சேர்ந்த கர்ப்பிணி ஒருவருக்கு பிரசவ வலி ஏற்பட்டுள்ளது. அவர் நயினாதீவு பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

தீவுப் பகுதிக்கான அம்புலன்ஸ் படகுச் சேவை தற்போது நடைபெறாததால் அவர் சாதாரண படகிலேயே குறிகாட்டுவானுக்குப் பயணிக்க நேர்ந்துள்ளது.

படகில் கொண்டுவரப்பட்டபோது அவருக்குப் பிரசவ வலி அதிகரித்துள்ளது. அதையடுத்துப் படகில் இருந்த ஆண்கள் அனைவரும் படகின் மேல்தளத்துக்கு மாற்றப்பட்ட பின்னர், படகில் இருந்த பெண்களின் உதவியுடன் பெண்ணுக்குப் பிரசவம் பார்க்கப்பட்டுள்ள நிலையில், கர்ப்பிணிக்கு பெண் சிசு படகிலேயே பிறந்தது.

படகு குறிகாட்டுவான் இறங்குதுறைக்கு வந்தபின்னர், புங்குடுதீவு மருத்துவமனையின் அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு தாயும், சேயும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (எ-9)

### சா/த...

பாடசாலை விண்ணப்பதாரிகள் அதிபர்கள் ஊடாகவும், தனியார் விண்ணப்பதாரிகள் தபால் மூலமாகவும் அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அன்னை...*
பிரதான நினைவேந்தல் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு, நாவலடியில் உள்ள அன்னை பூபதியின் சமாதியிலும், யாழ்ப்பாணத்தில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியிலும் நடைபெறவுள்ளது.

நாளை காலை 9.30 மணி முதல் 12 மணிவரை சமய அனுஷ்டானங்களுக்கு அமைய திதி வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு நாவலடியில் உள்ள அன்னை பூபதியின் சமாதியில் நடைபெறும்.

மாலை 4 மணியளவில் கல்லடி, திருச்செந்தூர் ஆலயத்தில் இருந்து அன்னை பூபதியின் சமாதி நோக்கிய நடைபயணம் ஆரம்பமாகும். மாலை 5 மணியளவில் சமாதியடியில் நினைவேந்தல் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் நாளை வெள்ளிக்கிழமை அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டமும், நினைவேந்தல் நிகழ்வும் நடத்தப்படவுள்ளது.

கிளிநொச்சி சேவைச் சந்தை முன்றிலில் காலை 8 மணிக்கு அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் ஆரம்பமாகி, தொடர்ந்து நினைவேந்தல் நிகழ்வும் நடைபெறும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளை அறிவித்துள்ளது.

இந்திய அமைதிப் படைக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையே போர் நடைபெற்ற காலப்பகுதியில் அன்னை பூபதி இந்திய அரசாங்கத்திடம் இரண்டு அம்சக் கோரிக்கையை முன்வைத்து 1988ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

உடனடியாகப் போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டும், புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வுகாணவேண்டும் என்ற இரு கோரிக்கைகள் அன்னை பூபதியால் முன்வைக்கப்பட்டிருந்தன.

நீர் மட்டும் அருந்தி உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நடத்திய அன்னை பூபதியின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் 1988ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி உயிர் துறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-எ-66-100)

# விசேட அறிவித்தல்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, மணியகாரன் வீதியைச் சேர்ந்த விக்னராசா கைம்பெண் தங்கப்பிள்ளை (தே.அ.அ.இல - 407181972V) ஆகிய நான் எமது ஆதன விபரம் சம்பந்தமாக தெளிவுபடுத்த வேண்டிய தேவை இருப்பதால் இதனை நான் உதயன் பத்திரிகை வாயிலாக பிரசுரிக்கிறேன்.

மேலும் புன்னாலைக்கட்டுவன் தெற்கு, பலாலி வீதியின் கிழக்குப் பக்கமாக இருக்கும் "அம்புலியப்புலம்" எனும் இறை நாமம் கொண்ட ஆதனமானது எனது தாய் தந்தை வழி வந்த முதுசச் சொத்து ஆகும். இதன் எல்லைகள் மேற்கு - றோட்டு, வடக்கு - ஒழுங்கை, தெற்கு - கந்தப்பிள்ளை சின்னத்தம்புவுக்கும், கிழக்கு - கதிரிப்பிள்ளை நடராசாவுக்கும், கதிரிப்பிள்ளை இரத்தினத்துக்கும் மறுபேருக்குரியதாகும். இவ்வாதனம் ஈடாகவோ, நிபந்தனை அறுதியாகவோ, அறுதியாகவோ எமக்கு வரவில்லை. இது எமது பரம்பரையாகவே வந்துள்ளது.

எமது ஆதனத்தில் கிழக்கு எல்லையில் இருக்கும் ஆதனம் "இராமன் கலட்டி" என்ற இறைநாமம் கொண்டதாகும். "தச்சனோலை" என்ற இறைநாமம் கொண்ட ஆதனம், புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயத்திற்கு கிழக்கு வடக்காக இருக்கும் ஆதனம், தச்சனோலை ஆகும். இவ்வாதனத்தின் நாமத்தை உறுதிப்படுத்தும் வகையில் தச்சனோலை அண்ணமார் என்ற கோயிலும் உண்டு. அக்கோயிலை பரம்பரை பரம்பரையாக ஐயங்கன் தவசி கணபதி இவர்கள் தற்போது புனரமைத்து ஆண்டு ஆட்சி செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எமது ஆதனத்திற்கு கிழக்குப் பக்கத்தில் இருக்கும் இராமன் கலட்டி என்ற ஆதனத்தின் உரிமையாளர்கள் எமது ஆதனத்தை அபகரிக்கும் நோக்கத்தோடு வேறு அமைவிடத்தில் இருக்கும் தச்சனோலை என்ற ஆதனத்தை சேர்த்து "இராமன்கலட்டியும் தச்சனோலையும்" என்று எமது ஆதனத்தை தம்வசப்படுத்த போலியான உறுதி தயாரித்து வைத்து எமக்கு எதிராக மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் குடியியல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். நாம் எமது ஆதனம் "அம்புலியப்புலம்" என்பதை உறுதிப்படுத்துவதற்காக யாழ் காணிப் பதிவகத்திற்கு சென்று எமது சட்டத்தரணி பரிசோதித்த வேளை எமது ஆதனத்தின் தாய் உறுதிகள், முற்பதிவுகள் என்பன கிடைக்கப் பெற்றதுடன், கிழக்குப் பக்கமாக இருக்கும் இராமன்கலட்டியும் தச்சனோலை என்ற காணியின் உறுதிகள் யாவும் எமது சட்டத்தரணியால் எடுக்கப்பட்டு பரிசோதித்து பார்த்த வேளை அக் காணி தற்போது எமக்கு வழக்குத் தாக்கல் செய்தவர்கள் அவ் ஆதனத்தை 1955ம் ஆண்டு தேசவழமைச் சட்டத்தின்படி முறையான சட்டரீதியான அறுதி உறுதி விற்றுள்ளார்கள்.

தற்போது இராமன்கலட்டியும் தச்சனோலையும் என்ற ஆதனத்தின் சொந்தக்காரராக எனது இரத்த உறவு முறையான ஒருவருக்கே உள்ளது. அதன் பின்னர் 1955ம் ஆண்டு அறுதி விற்ற உறுதிகளை திரும்ப, திரும்ப தமது தாய் உறுதியாக காட்டி இரண்டு சகோதரர்கள் போலியான உறுதி முடித்துள்ளார்கள். தற்போது வழக்காளி அதனை மறைத்து, எமது ஆதனம் அம்புலியபுலத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளை, வழக்காளியின் சகோதரி, சகோதரியின் மருமகள் 2018ம் ஆண்டு இராமன்கலட்டி தச்சனோலையும் என்ற காணியைக் கொள்வனவு செய்த ஆதனம் என்று எமது ஆதனம் அம்புலியபுலத்தில் உட்புகுந்து காணியில் கட்டட வேலைக்காக பறிக்கப்பட் கற்களை வழக்காளியின் மகளின் ஆதனத்திற்குள் மறைத்து வைத்ததுடன் சில கற்கள் காணிக்கு வெளியே வீதியின் வடக்குப் பக்க மதில் கரையில் வீசப்பட்டுள்ளது. இந்த பிணக்கில் இருக்கும் "இராமன்கலட்டியும் தச்சனோலையும்" என்ற ஆதனம் மொத்த நிலப்பரப்பு 27 முழுவதும் தமது உறுதியின் ஆதனடாப்பில் விபரித்து தனது ஆதனமாக வழக்குத் தாக்கல் செய்துள்ளார். இந்த நிலையில் வழக்காளியின் சகோதரி அவரின் மருமகள் தமது ஆதனம் என்று கூறி அடாத்தாக வந்தமை தொடர்பாக சுன்னாகம் பொலிசில் இரு பகுதியினரும் முறைப்பாடு செய்த வேளை பொலிசார் இரு பகுதியினரையும் விசாரித்துப் பிணக்கு நடைபெற்ற இடத்தைப் பார்வையிட்டும் விளங்கிக் கொண்ட பின்னர் வழக்காளியின் சகோதரிக்கும் அவரின் மருமகளுக்கும் உங்களுக்குக் காணி இருந்தால் உங்களுடைய சகோதரியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இடைபுகு மனுதாரராகவோ இல்லை என்றால் புறம்பான வழக்காளியாகவோ செல்ல முடியும் என்று அறிவுறுத்தியும் குடியியல் வழக்கு (சிவில்) நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது வழக்கில் சம்பந்தப்பட்டவர்களை காணிக்குள் செல்ல வேண்டாம் என்று சொல்ல முடியாது. ஆகவே நீங்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் வழக்குத் தாக்கல் செய்யும் வரை இருபகுதியினரும் காணிக்குள் சென்று பிரச்சனைப்படலாம் என்பதற்காக காணிக்குள் இரு பகுதியினரையும் செல்லவேண்டாம் என்று பொலிசார் இருபகுதியாரையும் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவர்களின் வேண்டுகோளுக்கு சம்மதித்துள்ளோம்.


(CS 00247) S-1

வி.தங்கப்பிள்ளை

# மரண அறிவித்தல்

## கிருபானந்தன் கிரிசிகன் (கிரி)

(யாழ். இந்துக் கல்லூரி தரம் - 10 மாணவன்)



தோற்றம் 19.09.2009 மறைவு 16.04.2024

அனலைதீவை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கிருபானந்தன் கிரிசிகன் (யாழ். இந்துக் கல்லூரி தரம் - 10 மாணவன்) அவர்கள் கடந்த (16.04.2024) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் கிருபானந்தன் (அலுவலக உதவியாளர் - ஊர்காவற்றுறை அன்ரனிஸ் கல்லூரி) - பத்மினி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ் சென்ற அமிர்தநாதன், புவனேஸ்வரி, காலஞ்சென்ற கந்தையா, பிலோமினா ஆகியோரின் அன்புப் பேரனும், தயாபரன், பிரபாகரன், ரவிக்குமார் ராகினி, பரமேஸ்வரன் பவாணி ஆகியோரின் அன்புப் பெறா மகனும், குணதீஸ்வரன் அருந்ததி, யோகேந்திரன் மதுராங்கனி, புவனேந்திரன் (UK) தேவரஞ்சினி ஆகியோரின் அன்பு மருமகனும், விதுசாயினி, கிருத்திக் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தர்சிகன், தர்சனா, தாட்சாயினி, அபிநயன், தமிழ்க்கவி, தமிழ்நிலா, தமிழ் நிலவன், ரூபஸ்ரிகா ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும், ஐருன், ஐகாரா, கிஷான், தருணிகா ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.04.2024) வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணியளவில் இல. 15/11 B, கண்டி வீதி, முதலாம் ஒழுங்கை, அரியாலை மேற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இறுதிக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

தகவல்: குடும்பத்தினர்.
077 9410 516

(CS 27442) A-

# மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 02 . 19307



மறைவு 17 . 04 . 2024

## திருமதி சுபபிரமணியம் மங்கையற்கரசி

சுருவில் ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மங்கையற்கரசி அவர்கள் நேற்று (17.04.2024) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அரியகுட்டி - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் பாசமிகு மனைவியும், சரவணபவன் (ஜேர்மன்), செல்வக்குமாரி, தனபாலசிங்கம் (ஜேர்மன்), கமலாம்பிகை, தவக்குமார் (சுவிஸ்), சறுவானந்தன் ஆகியோரின் அன்புத் தாயும், சந்திரமதி (ஜேர்மன்), சோமசுந்தரம், ரங்காகுலதேவி (ஜேர்மன்), முருகதாஸ் (வேலணை), சுகந்தி (சுவிஸ்), ஜெயந்தி ஆகியோரின் பாசமிகு மாமியும், அனுஜன், கல்ஜா (ஜேர்மன்), அனுஜி, அனியன் (ஜேர்மன்), அரிகரன், லோஜி, மயூரி, யசிந்தன், மதுஷானா, தேனுஜா, டிலக்சன், டிலக்சி (சுவிஸ்), அபிகிருஷ்ணா, சாளினி, லதுஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காண், னோகா (ஜேர்மன்), ஆலியா (ஜேர்மன்), தவன் பிருத்தி, அக்ஷனா, அனிஸ், அக்ஷயன், அஸ்மிதன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2024) வியாழக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் சுருவில் ஊர்காவற்றுறை இந்து மயானத்திற்கு எடுத்துச்சென்று தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

32/2, பிரப்பங்குளம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்: முருகதாஸ் குடும்பம்
(மருமகன்)
077 1911 758

(CS 249) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த...

நடத்துவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுவருகின்றன. பரீட்சை தாள்கள் அச்சிடுதல், பரீட்சை நிலையங்களுக்கான ஆளணி நியமனம், அவர்களுக்கான பயிற்சி போன்ற நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

வடக்கில் தீவுப் பகுதி உட்பட சில விசேட பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும். கைதிகளுக்காக வெலிக்கடை சிறைச்சாலையில் பரீட்சை நிலையமொன்றும், மஹரகம மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை பெறுபவர்களுக்காக அங்கு பரீட்சை நிலையமொன்றும், தங்காலை மற்றும் இரத்மலானை ஆகிய பகுதிகளில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான பரீட்சை நிலையங்களும் இயங்கும்.

பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைத்ததும் அதை உரிய வகையில் சரி பார்க்க வேண்டும். பெயர், பாட எண்ணிக்கை, மொழிமூலம் போன்ற விடயங்களை கண்காணிக்கவும். தவறு இருப்பின் முன்கூட்டியே உரிய தரப்புக்கு தெரியப்படுத்தி சீர்செய்துகொள்ளவேண்டும். அதேபோல பாடசாலைகள் கடைசிநேரம்வரை காத்திருக்காமல் மாணவர்களுக்கு அனுமதி அட்டையை வழங்கி, தகவல்களை உறுதிப்படுத்திக்கொள்ளவும். அதன்பின்னர் வேண்டுமானால் பாடசாலைசம்பிரதாயங்களுக்கு அமைய வழங்கலாம்.

பரீட்சை நிலையங்களுக்கு கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் உபகரணம் உள்ளிட்ட, பரீட்சை நிலையங்களுக்கு கொண்டுவருவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ள உபகரணங்கள் கொண்டு வரப்படுவது அதிகரித்துள்ளது. இம்முறை கண்காணிப்புத் தீவிரப்படுத்தப் பட்டுள்ளது. 5 ஆண்டுகளுக்குப் பரீட்சை எழுத தடைவிதிக்கப்படக்கூடிய இவ்வாறான நடவடிக்கைகளில் எவரும் ஈடுபடக் கூடாது -என்றார். (அ-எ-44)

## தமிழ்...

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்கினால் அது ஒருவகையில் தேர்தல் புறக்கணிப்பே. தேர்தலில் சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களிக்காமல் இருப்பதும் புறக்கணிப்புத்தான்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன். அவர் அனுப்பியுள்ள கேள்வி - பதில் அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வெறுமனே தேர்தலைப் புறக்கணித்தால் வாக்களிப்பு நிலையங்களில் என்ன நடக்கின்றது என்பது தெரியாமல் போய் விடும். தம்பி கஜேந்திரகுமாரின் வாக்கையும், என் வாக்கையும் யாரோ சிலர் தமக்குச் சாதமாகப் பயன்படுத்தவே அது வழிவகுக்கும். அதனால் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தி அவருக்கு தமிழ் மக்கள் வாக்களிப்பது புறக்கணிப்பின் வெற்றியை உணர்த்தும் உச்சக்கட்டமாகக் கொள்ளலாம்.

70 ஆண்டுகளாக நாம் ஏமாற்றப்பட்டமை போன்று நடக்காமல் இருக்க தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது வலுவுள்ளதாக அமையும்.

சிங்கள அரசியல்வாதிகளை நம்புவோம், முஸ்லிம் அரசியல்வாதிகளை நம்புவோம் என்று 'ஜென்டில்மன்' அரசியல் செய்து இரா.சம்பந்தன் ஏமாற்றப்பட்டார். இரா.சம்பந்தன் செய்த தவறு இது தான். இதனால் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள்தான். திருகோணமலையையும், கிழக்கு மாகாணத்தையும் இழந்து நிற்பதற்குக் காரணம் இந்த 'ஜென்டில்மன்' அரசியல்தான்.

தமிழ் வேட்பாளருக்கு முதல் விருப்பு வாக்கு, சிங்கள வேட்பாளர்களுக்குள் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்ய முன்வருவோருக்கு அடுத்த விருப்பு வாக்கு. தமிழர்களுக்குத் தக்க தீர்வைத் தர முன்வருவோர், அதை வெளிப்படையாக வெளிநாட்டு இராஜதந்திரிகள் மூன்றுபேர் முன்னிலையில் கையெழுத்திட்டு ஆவணம் ஒன்றைத் தரமுடியும். எழுத்து மூலம் தீர்வைக் கூற முடியாதவர்கள், தாம் வென்ற பின்னர் எதையும் தருவார்கள் என்று நாம் எதிர்பார்க்கமுடியாது - என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (அ-எ-இ)

## சுமந்திரனின்...

மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ள கருத்து அர்த்தனமானது என்று ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை ஒரு ஜனநாயக நாடு. தமிழர்கள் தரப்பில் யாரும் தேர்தலில் போட்டியிடக் கூடாது என்று யாரும் வரையறை விதிக்கமுடியாது.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் எடுத்துக்காட்டாகக் கூறும் குமார் பொன்னம்பலம் மற்றும் சிவாஜிலிங்கம் ஆகிய இருவரும் ஒட்டுமொத்த தமிழ் மக்களின் வேட்பாளர்களாக நிறுத்தப்படவில் [illegible] தற்போதைய பொதுவேட்பா ளர் [illegible] அவ்வாறானது அல்ல.

நா[illegible] பல தடவைகள் பலருக்கு வாக்களித்துள்ளோம். ஆனால், தமிழ் மக்களுக்கு எவ்வித நன்மைகளும் கிடைக்கவில்லை. சகல ஜனாதிபதிகளினாலும் ஏமாற்றப்பட்டிருக்கின்றோம். பொதுவேட்பாளர் என்பது இனப்பாகுபாடான விடயமல்ல. எமது சுய மரியாதையை, உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காக நாங்கள் தெரிந்தெடுத்துள்ள ஒரு வழிமுறையாகும் - என்றார். (அ-எ-100)

## ராஜபக்ச...

சிங்க இருக்கும்வரை அவருக்கு ஆதரவு வழங்கமாட்டார்கள். அதனால் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் உள்ள மக்களுள் பெரும்பாலானவர்கள் ஐக்கிய மக்கள் சக்தி பக்கம்தான் தற்போது நிற்கின்றனர். ரணில் விக்கிரமசிங்க எப்படி தான் முயற்சித்தாலும் ராஜபக்சக்களுடன் இருக்கும்வரை அவரின் முயற்சி வெற்றியளிக்காது.

தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் என்னைப் போன்ற அரசியல்வாதிகளுக்கு வரவேற்பு உள்ளது. அந்த மக்களின் உரிமைக்காக முன்னின்றவன் நான். அதனால் சிங்களப் புலி என்றுகூட முத்திரை குத்தினர் - என்றார். (எ-44)

# மரண அறிவித்தல்



தோற்றம்
24.10.1942

மறைவு
15.04.2024

## சின்னத்தம்பி சிவஸ்கந்தராஜா

**(யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவன், ஓய்வுபெற்ற கணக்காளர்)**

DJ industries (Pvt) Ltd Mount Lavania, Srilanka வின் முன்னாள் கணக்காளரும், இலக்கம் 14A அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவஸ்கந்தராஜா அவர்கள் கடந்த 15.04.2024 திங்கட் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பதுமநிதி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற சுந்தராம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தம்பையா - பரமேஸ்வரி, காலஞ்சென்ற சிந்தாமணி ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற சிவபாலேஸ் வரராஜாவின் அன்புச்சகோதரனும், காலஞ்சென்ற சுகுணாவதியின் மைத்துனரும், யசீந்திரன் (இத்தாலி), நேர்த்திகா (UK), கௌதீசன் (உரிமையாளர் - நல்லைக்குமரன் ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சாரதா (இத்தாலி), சீராளன் (UK), தாரணி (ஆசிரியை யா/ மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சஞ்ஜீவன், தயாளன் ஆகியோரின் பெரிய தந்தையும், நிவேதன், பபிசன், கிசாளன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.04.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**பிள்ளைகள், மருமக்கள்.**

14A அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

யசீந்திரன் 0039 348 979 3122
சீராளன் 0044 747 513 0113
கௌதீசன் 0094 776 669 905

(CS/54751) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசின்...

-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று ...ிய ஊடக சந்திப்பிலேயே அவர் ... தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச கடன் வழங்குநர்களுடன் பேச்சுகள் நிறைவடைந்துள்ளன என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. ஏப்ரல் மாதத்துக்குள் பேச்சுகளை நிறைவு செய்த 12.7 பில்லியன் டொலர் கடனை மறுசீரமைப்பதற்கான இணக்கப்பாட்டை எட்டுவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. அரசியலுக்கு அப்பால் இந்த விடயத்தில் கவனம் செலுத்தவேண்டும். நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகத்தை அடிப்படையாகக் கொண்டே கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ளமுடியும் என்று கடன் வழங்குநர்கள் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தனர். ஆனால், தற்போது நாம் எதிர்பார்ப்பதைவிட பொருளாதார வளர்ச்சிவேகம் அதிகமாகக் காணப்பட்டால், அந்த நேர்மறையான வளர்ச்சியின் அதிக பங்கு தமக்கு வழங்கப்படவேண்டும் என்று குறிப்பிடுகின்றனர். உற்பத்தி பொருளாதார டொலர் அடிப்படையிலேயே மதிப்பிடப்படும். இது தொழில்நுட்பக் காரணியாகும்.

பொருளாதார வளர்ச்சி வேகத்துக்கமைய கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாகவே தெரிகிறது. ஆனால், அது முழுமையாக அவ்வாறு இடம்பெறத் தேவையில்லை என்று நாம் எண்ணுகின்றோம்.

கடன் மறுசீரமைப்பில் பொருளாதார வளர்ச்சிவேகம் ஓரளவுதாக்கம்செலுத்துவதை ஏற்றுக் கொள்ளமுடியும்.

ஆனால், நூறு வீதம் தாக்கம் செலுத்தினால் அது எமக்கு எதிர்மறையான தாக்கத்தை அதிகரிக்கும்.

இன்னும் 6 மாதங்களே தற்போதைய அரசாங்கம் ஆட்சியில் இருக்கும் என்பதால், எட்டப்படும் இணக்கப்பாடுகளில் வெளிப்படைத் தன்மையைப் பேண வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம். சர்வதேசக் கடன்களில் ராஜபக்சக்கள் பெரியளவில் மோசடி செய்துள்ளனர். ராஜபக்சக்களால் கொள்ளையிடப்பட்ட ஒவ்வொரு டொலரும் எமது ஆட்சியில் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும்.

முன்னெடுக்கப்படும் இந்த பேச்சுகளுக்கமைய 2040ஆம் ஆண்டு வரை நாம் செயற்படவேண்டும். சுமார் 10 வருடங்களுக்கான இணக்கப்பாட்டை எட்டுவதே இதன் பொருளாகும். மே மாதம் ஜனாதிபதி ரணில் இந்த இணக்கப்பாட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் பின்னர், சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியானால் அவரும் அந்த ஒப்பந்தத்துக்கமையவே செயற்படவேண்டும். அவ்வாறில்லையென்றால் நாம் மீண்டும் வங்குரோத்தடைந்த நாடாகிவிடுவோம். மீண்டுமொரு முறை கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கான வாய்ப்பும் இலங்கைக்கு இல்லை. அதனால் இந்த விடயத்தில் அரசாங்கத்துக்கு அப்பால், எதிர்க்கட்சியின் நிலைப்பாடும் பெற்றுக் கொள்ளவேண்டும் என்பது எமது எண்ணம் - என்றார். (அ-எ-இ)


## வீடு விற்பனைக்கு

கோண்டாவில் டிப்போவுக்கு
அருகாமையில்
1 3/4 பரப்பு வீட்டுடன் கூடிய காணி
விற்பனைக்குண்டு.
**076 821 9414**

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

### af பிரெஞ்சு மொழி

- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf )
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna

## வேலையாட்கள் தேவை


யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள
PPT எனும் நிறுவனத்திற்கு
வேலைக்கு ஆட்கள் தேவை
(CS/54758) J-1
தொடர்பு:- 077 386 6250

## வேலையாள் தேவை

கட்டட நிர்மாணத்துக்கு
வேலையாட்கள் தேவை.
➤ மேசன் ➤ கூலி
(CS/54759) J-1
தொடர்பு:- 077 469 8605, 076 102 3107


## மரண அறிவித்தல்

தோற்றம்
01 . 11 . 1953



மறைவு
16 . 04 . 2024

### வேலாயுதம் வேலும்மயிலும்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2024) வியாழக்கிழமை பகல் 11.00 மணியளவில் சண்டிலிப்பாய் மத்தி காளி கோவிலடியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக பிப்பிலி இந்து மாயனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

குடும்பத்தினர்

(CS54754) J-1

## வைரவிழா வாழ்த்துக்கள்



திருமதி. இராஜசெல்வி தவராஜா
( முகாமைத்துவ பணிப்பாளர் - ஹரிபோல் சதுக்கம்)

எங்கள் அம்மாவிற்கு வைர விழா வாழ்த்துக்கள்!
இன்று உங்களுக்கான நாள் !
அறுபது ஆண்டுகளில் நீங்கள் எமக்கு ஆற்றிய சேவைகள் பல..
நாம் எப்போதும் வேலை என்று ஓடிக்கொண்டிருக்கின்றோம்...
நீங்கள் எம் பின்னால் இருந்து வழிநடத்திக் கொண்டிருக்கின்றீர்கள்..
உங்கள் உத்வேகமே எங்களை இயக்குகின்றது,
எங்கள் உழைப்பினால் மட்டும் வேலைகள் நடந்து விடுவதில்லை,
நீங்கள்தான் எங்கள் பணிகளை இலகுவாக்கி விடுகின்றீர்கள்,
உங்கள் கோபம் இதுவரை நாம் கண்டதில்லை,
அதிகாலையில் தொடங்கும் உங்கள் சேவை இரவு வரை நீண்டு கொண்டே செல்லும்,
எமக்கான உங்கள் உபசரிப்பும் கவனிப்பும் சொல்லிலடங்கிவிடாது..
எங்களுக்காக நீங்கள் இருப்பது போல் நாம் எப்போதும் உங்களுக்காக இருப்போம்..
இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள் அம்மா !!!
வாழ்க! வாழ்க ! வாழ்க பல்லாண்டு ...

Hari Bol Square

என்றும் உங்களுடன்.
ஹரிபோல் குழுமத்தினர்,
ஹரிபோல் சதுக்கம் -
மருதனார்மடம், யாழ்ப்பாணம்.

## ஆலய வயற்காணி/ காணிக்குரிய பங்குகள் பகிரங்க ஏலம் விடுதல் சிறுபோகம் 2024

### அன்பார்ந்த விவசாயப் பெருமக்களே!

எமது கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்திற்கு சொந்தமான கீழ்க்குறிப்பிடும் வயற்காணிகள் எதிர்வரும் 19ம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளன.

(1) வயற்காணி
மருதநகர் - 2 1/4 ஏக்கர்

(2)பங்குகள்
பெரிய பரந்தன் LB2, D/5
(1) இரண்டு ஏக்.பங்கு ஐந்து
2x5= 10ஏக்கர்
(2)பெரிய பரந்தன் D/6
இரண்டு ஏக்.பங்கு இரண்டு
2x2= 4ஏக்கர்

(3)குறிப்பிட்ட நேரத்திற்கு ஏலம் விடப்படும்.

(4)ஏலத்தில் காணியை/ பங்குகளைப் பெறுபவர்கள் அன்றைய தினம் பி.ப 01.00 மணிக்கு முன் முழுத்தொகையையும் செலுத்தவேண்டும்.

(5)ஒரு ஏக்கருக்கு ஏலம் கூறப்பட்டு மொத்த ஏக்கரால் பெருக்கப்பட்டு தொகை கணிப்பிடப்படும்.

(6)காசோலைகள் பொறுப்பேற்கப்படமாட்டாது.

(7)ஏலத்தில் காணியை/ பங்குகளைப் பெறுபவர்கள் பி.ப 01.00 மணிக்கு முன் முழுத்தொகையையும் செலுத்தத் தவறின் ஒழுங்கில் வரும் அடுத்த விவசாயிக்கு உரிமை மாற்றப்படும்.

(8)ஆலயத்தில் பாரிய திருப்பணிகள் நடைபெறுவதால், விவசாயிகளின் பூரண ஒத்துழைப்பை ஆலய பரிபாலன சபையினர்/ திருப்பணிச் சபையினர் எதிர்பார்க்கின்றனர்.

ஆலய பரிபாலன சபை சார்பில்

| | | |
|---|---|---|
| ச.ஸ்ரீகௌரிபாலா | மா.சிவராசா | சு.வரதராசா |
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
| 077 602 7147 | 077 540 7448 | 077 881 0184 |

(CS 28258) S-1


## விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி வசதிகள்

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show money) வசதிகள்.
**074 173 7684**
(CS 28175) S-1

## Job Bank

அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் வேலைவாய்ப்பு. உடன் தொடர்பு கொள்ளவும். முந்தும் 07 பேருக்கு முன்னுரிமை

- தகைமை O/L, A/L
- வயது எல்லை 23-36
- ஆண், பெண் இருபாலாரும்

**075 910 6973**
(CS 00245) S-1




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.04. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org